செ.வெ.எண்: 63 நாள்: 24.01.2017

**தமிழக அரசு முன்னாள் படைவீரர்கள் நலனை மேம்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது - மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட முப்படைவீரர் வாரியத் தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் முன்னாள் படைவீரர் நலத்துறையின் சார்பில் தொழில்முனைவோர் கருத்தரங்கம் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட முப்படைவீரர் வாரியத் தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (24.01.2017) நடைபெற்றது.

இந்த தொழில்முனைவோர் கருத்தரங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட முப்படைவீரர் வாரியத் தலைவர் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது.

தமிழக அரசு முன்னாள் படைவீரர் நலத்துறையின் கீழ் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. இதன்படி முன்னாள் படைவீரர்களுக்கு சுயவேலை வாய்ப்பு துவங்கிட ஊக்குவிக்கும் வகையில் தொழில்முனைவோர் கருத்தரங்கு நடத்த தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் மாவட்ட ஆட்சியரகத்தில் நமது மாவட்டத்தில் உள்ள முன்னாள் படைவீரர்களுக்கு தொழில்முனைவோர் கருத்தரங்கம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இக்கருத்தரங்கில் காரைக்குடி மற்றும் தஞ்சாவூர் திறன் மேம்பாட்டு மையங்கள், மாவட்ட முன்னோடி வங்கி, மாவட்ட தொழில் மையம், நபார்டு, தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம், காதி மற்றும் கிராம தொழில் வாரியம், வேலைவாய்ப்புத் துறை மற்றும் தாட்கோ உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலர்கள் தங்களது துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் சுயதொழில் திட்டங்கள் குறித்து விளக்கமாக எடுத்துரைத்தனர். மேலும் தமிழக அரசு முன்னாள் படை வீரர்கள் நலனை மேம்படுத்தும் வகையில் கல்வி, வேலைவாய்ப்பு போன்றவற்றில் முன்னுரிமை அளித்து வருவதுடன் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறது. எனவே முன்னாள் படைவீரர்கள் இந்த தொழில்முனைவோர் கருத்தரங்கை முறையாக கற்று சுயதொழில் செய்து வாழ்வில் முன்னேற வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட முப்படைவீரர் வாரியத் தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் விங்.கமாண்டர்.வே.கணேசன் உதவி இயக்குநர் (பொ) முன்னாள் படைவீரர் நலம், அரசு அலுவலர்கள் மற்றும் முன்னாள் படை வீரர்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**